# முதல்வர் பிறந்த நாளில் எடுக்க வேண்டிய உறுதிமொழி!

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் செய்தி!**

உயிர் பிரச்சினையான மொழிப்போரையும் உரிமைப் பிரச்சினையாக தொகுதி மறுசீரமைப்பையும் தமிழ்நாடு எதிர் கொண்டுள்ள சூழலில் தமிழ்நாட்டு மக்கள் ஏற்க வேண்டிய உறுதிமொழி:

**உறுதிமொழி**

- **தமிழ்நாட்டின் நலன்களையும் எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம்.**
- **தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம்.**
- **தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்! இதுதான் ஒரே இலக்கு!**

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் சிறப்பிதழ்!



**இன்று வெளிவந்துள்ளது!**

**‘திராவிட மாடல்’ ஆட்சியின் முதலமைச்சர், கழகத் தலைவர், திராவிட நாயகர், மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் சிறப்பிதழ் இன்று (மார்ச் - 1) இந்த இதழுடன் வெளிவந்துள்ளது!**

## உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம்!

# முதல்வரை - மாற்றுத் திறனாளிகள் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்!

**சென்னை, மார்ச் 1 -**

**உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்ற முதலமைச்சரின் அறிவிப்புக்கு மாற்றுத் திறனாளிகள் நேரில் நன்றி தெரிவித்தனர்.**

ஒவ்வொரு பிறந்த நாளின் போதும் ஒரு நலத்திட்டத்தை அறிவிப்பது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டு பிறந்த தினத்தை யொட்டி, உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படும். அதற்கேற்ப நடைபெற இருக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் கொளததூரில் பெரியார் மருத்துவமனை திறப்பு விழாவில் அறிவித்தார்.

சென்னை முகாம் அலுவலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும், டிசம்பர் 3 இயக்கத்தின் மாநிலத் தலைவருமான தீபக் நாதன், பொதுச் செயலாளர் அண்ணாமலை, பொருளாளர் வரதன் பூபதி மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்தனர்.

அப்போது, மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில், உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 ஆகியவற்றில் வரும் சட்டமன்றக் கூட்டத்தொடரில் தக்க சட்டத்திருத்தம் கொண்டு வரப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின்போது தலைமைச் செயலாளர் முருகானந்தம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## உள்ளாட்சி மன்றங்களில் உரிய பிரதிநிதித்துவம் அறிவித்ததற்கு

# மாற்றுத்திறன் தோழர்கள் நன்றி கூறியது எனது பிறந்தநாள் பரிசு!

**சமூக வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!**

**சென்னை, மார்ச் 1–**

**மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கு மாற்றுத்திறன் கொண்ட தோழர்கள் நன்றி தெரிவித்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–**

**மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்திட, “உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில், உரிய பிரதிநிதித்துவம் வழங்கப் படும்” என நேற்று அறிவித்தேன்!**

**இன்று, மாற்றுத்திறன் கொண்ட தோழர்கள் என்னை அரவணைத்து – கைகளை இறுகப்பற்றிக் கொண்டு, “நன்றி” என்றபோது, என் பிறந்தநாள் பரிசைப் பெற்றதாக உணர்ந்தேன்!**

**இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**




ஆசூர் ஊராட்சியில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் இந்தியை திணிக்கும் ஒன்றிய அரசை கண்டித்து கண்டனக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. நல உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், கழக பேச்சாளர் அத்திப்பட்டு சாம்ராஜ், கழக இளம் பேச்சாளர் வழக்கறிஞர் யாசர், ஒன்றியச் செயலாளர் கே.எம்.ஆர். க.குமணன், இ.அசோகன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ.யுவராஜ், பெ.மணி, ஒன்றிய குழு துணை தலைவர் திருமதி திவ்யப்பிரியா இளமது, ஒன்றிய கழக நிர்வாகிகள் த.கன்னியப்பன், டி.எல்.தயாளன், ந.வீரராகவன், முனியம்மாள், ராஜகோபால், கோ.கமலக்கண்ணன், ஏ.கே.பரசுராமன், வே.திருநாவுக்கரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

கழகத் தலைவர்

# மு.க.ஸ்டாலின்

அவர்களின்



## 72வது பிறந்த நாள் நிகழ்ச்சிகள்!

**1-3-2025**

| | | |
|---|---|---|
| **காலை 8.00 மணி** | - | **பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல்** |
| **” ”** | - | **முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல்** |
| **காலை 8.30 மணி** | - | **தந்தை பெரியார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்தல்** |
| **காலை 9.00 மணி** | - | **அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கம் - வாழ்த்துப் பெறுதல்** |

**- தலைமைக் கழகம்**

## சமூக நீதிக்கான சரித்திர நாயகர் –

# செயலின் மறுவடிவமாம் முதலமைச்சருக்கு தாய்க் கழகம் வாழ்த்து!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வாழ்த்து செய்தி!

*சென்னை, மார்ச் 1*

*திராவிட மாடல் அரசின் தலைவராம், சமூக நீதிக்கான சரித்திர நாயகர் செயலின் மறுவடிவமாம் முதலமைச்சருக்குத் தாய்க் கழகம் வாழ்த்துகிறது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*“திராவிட மாடல்” அரசின் தலைவராம் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு (1.3.2025) பிறந்த நாளில், தாய்க் கழகத்தின் சார்பில் மனங்கனிந்த குளிர்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இவரின் நிர்வாகத் திறன் எத்தனை நேர்த்தியானது என்பதை, இவர் சென்னை மாநகர மேயராக இருந்தபோதே நாடே கண்டு வியந்திருக்கிறது. சென்னை மாநகரில் திசைதோறும் துலங்கும் மேம்பாலங்கள் எல்லாம் அவர் புகழ் பேசும்!*

*உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது ஜப்பான் வரை நேரில் சென்று, ஒகனேக்கல் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்திக் காட்டிய சிற்பி!*

*அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதை நடை முறைப்படுத்தி, தந்தை பெரியாரின் லட்சியத்தை வென்று காட்டிய லட்சிய வீரர்!*

*புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், மகளிர் உரிமைத் தொகை (மாதம் 1000 ரூபாய்), மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டம் (விடியல் பயணம்), நான் முதல்வன் திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் (இங்கிலாந்து அரசே பின்பற்றப் போவதாக அறிவித்துள்ளது), கலைஞர் வீடு வழங்கும் திட்டம் என்று கடந்த நான்கு ஆண்டுகளில் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசின் மக்கள் நலத் திட்டங்கள்மூலம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ்நாடு முதல் நிலை மாநிலமாக ஒளிவீசுகிறது!*

*ஒன்றிய அரசின் பொருளாதாரத் தடைகளுக்கிடையே நாளும் நாளும் சாதனைகள் என்பதெல்லாம் அசாதாரணமானவை!*

*நலப் பணிகள்மூலம் ஒவ்வொரு வீட்டின் கதவையும் தட்டி, ஏதோ ஒரு வகையில் பால் வார்க்கிறது - மக்கள் பலன் அடைந்து வருகின்றனர். “இது நமது ஆட்சி” என்ற உரிமையோடு கொண்டாடும் மனப்பான்மை மக்களிடம் நிலவுகிறது.*



*சமூகநீதி, பெண்ணுரிமை, மாநில உரிமை, மொழி உரிமை, சுயமரியாதை, பகுத்தறிவு, சமதர்மம், சமத்துவம், பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு என்கிற திராவிட சித்தாந்தத்தில் வீறுநடை போடும் தமிழ்நாட்டை, இந்தியத் துணைக் கண்டமே திரும்பிப் பார்க்கும் வகையில் நல்லாட்சி நாயகராக மிளிர்கிறார் நமது ஒப்பற்ற முதலமைச்சர்!*

*“உறவுக்குக் கைகொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்” என்பதில் கவனமாக, வலிமையாகக் காய் நகர்த்தி வருகிறார்.*

*பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென், “தமிழ்நாடு மேற்கு அய்ரோப்பிய நாடுகளோடு போட்டியிடும் சூழல் உருவாகியுள்ளது” என்று கூறியதையும் இணைத்துப் பாராட்டுகிறோம்.*

*ஜனநாயகம், சமூகநீதி, மதச் சார்பின்மைக்கு விரோதமாக ஒவ்வொரு அடியையும் வேகவேகமாக எடுத்து வைக்கிற ஒன்றிய அரசை எதிர்த்து நிற்கும் திராணியும், வலிமையும் பொருந்திய தலைவராக இந்தக் காலகட்டத்தில் தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல - இந்தியத் துணைக் கண்டத்திற்கே நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் நமது ஒப்பற்ற முதலமைச்சரை தாய்க் கழகம் கொள்கைப் பாசத்தோடு, அன்போடு அரவணைத்து உச்சிமோந்து வாழ்த்துகிறது.*

*உடல்நலத்துடன் நீடு வாழ்ந்து, நாட்டுக்கு நற்றொண்டு ஆற்றிட வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்!!*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

# பொன் கூட்டி வரும் முதல்வரின் பிறந்த நாளுக்கு முன் கூட்டி வாழ்த்துச் சொன்னேன்!

**- கவிப்பேரரசு வைரமுத்து**



மாண்புமிகு முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின் அவர்களை
முகாம் அலுவலகத்தில்
சந்தித்தேன்

வைரமுத்து படைப்புலகம் குறித்த
பன்னாட்டுக் கருத்தரங்கம்
‘வைரமுத்தியம்’ என்ற பெயரில்
16.03.2025 அன்று நிகழவிருக்கிறது

கருத்தரங்கில் நிறைவுரை ஆற்ற
இசைவு தெரிவித்திருக்கும்
முதலமைச்சருக்கு
அன்போடு
அழைப்பிதழ் தந்தேன்

ஒருவரை ஒருவர் பார்த்ததும்
இருவருமே மலர்ந்துவிடுகிறோம்

**அவரது**
**பாசாங்கில்லாத பாசம்**
**எப்போதும் பரவசப்படுத்துகிறது**

**பொன்கூட்டி வருகிற**
**பிறந்த நாளுக்கு**
**முன்கூட்டி வாழ்த்துச் சொன்னேன்**

விழாகுறித்து விசாரித்தார்

கருத்தரங்கில்
இந்திய அளவிலும்
உலக அளவிலும்
புகழ்மிக்க அறிஞர் பெருமக்கள்
ஆய்வுக் கட்டுரைகள்
வாசிக்கிறார்கள்

உச்சநீதிமன்றத்தின்
மாண்பமை நீதியரசர்
ஆர்.மகாதேவன்
கருத்தரங்கத்தைத்
தொடங்கி வைக்கிறார்

மறைமலை இலக்குவனார்
ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த
‘Vairamuthu’s Mahakavithai’
என்ற ஆங்கில நூலை
ஒன்றிய முன்னாள் அமைச்சர்
ப.சிதம்பரம் வெளியிடுகிறார்;
மலேசிய முன்னாள் அமைச்சர்
டத்தோஶ்ரீ எம்.சரவணன்
முதற்படி பெறுகிறார்

வைரமுத்தியம் என்ற
கருத்தரங்கக்
கட்டுரைத் தொகுப்பை
மாண்புமிகு முதலமைச்சர்
வெளியிடுகிறார்;
எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி
முதற்படி பெறுகிறார்

53 ஆண்டுகள்
நுரைக்க நுரைக்க ஓடிவந்த
ஓட்டப் பந்தயத்தில்
எனக்கு வழங்கப்படவிருக்கும்
ஒருகோப்பைப் பழச்சாறுதான்
இந்தப்
பன்னாட்டுக் கருத்தரங்கம்

விழாவில் பங்கேற்கும்
அறிவுலகத்தை
நெற்றி நிலம்பட வணங்குகிறேன்